முருகப்பெருமான் துணை

**மகான் இராமலிங்க சுவாமிகள் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**08.05.2023,** திங்கட்கிழமை

1. கலிவெல்ல அவதாரம் புரிந்த
கந்தனின் அவதாரம் ஆன
அழிவில்லா ஞானக் குருவே
அரங்கனே உன் பெருமை கூறி
2. கூறியே சோபகிருது தகர்திங்கள்
குறைவிலா இருபானைதிகதி சோமவாரம்
தெரிவிப்பேன் அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 25ம் நாள், 08.05.2023, திங்கட்கிழமை)
தேசிகனுக்கு இராமலிங்க சுவாமிகள் தானும்
3. தானுரைக்க வள்ளல் தன்மையை
தனிநபர் அவரவரும் அடைய
ஞானமாக அன்னதானமாக
ஞானதேசிகன் அருளும் மார்க்கம்
4. மார்க்கம் மக்களால் ஏற்கப்பட
மகத்துவம் அவரவர்க்குள்ளே
மார்க்கம் வழி வந்து இனிதே
மனமாற்றம் தெளிவு ஊட்டும்
5. ஊட்டவே உள் உணர்வாகி
உயிர்கொலை நீக்கி வாழும்
திட்டமிடல் அரங்கேறி நன்கு
தெய்வபலமாகப் பற்றி வர
6. வருகவே வள்ளல் தன்மை
வரமாக அவரவர் உள்ளும்
முருகப்பெருமான் ஆசிபடவே
முழுமை ஞானமாகக் கலந்துநிற்கும்
7. நிற்கவே அரங்க ஞானியின்
நீதியான தரும வழிகளை
அற்புதமான அன்னதானமாக
அளவிலா செய்திடும் மக்களுக்கு

8. மக்களுக்கு ஆபத்து கண்டமில்லை
மரணம் மறுமை என்கிற
தேக்கம் சுழற்சி என்பதுமிலா
திடநிலை ஆகி இனிபிறவா
9. பிறவா பெரும்பெறு தன்னை
பேராசான் அரங்கன் வழி
மறவா தொடரும் மக்கள்
மண்ணுலகில் எல்லோரும் அடைந்து
10. அடைந்து ஞானவான்களாக
ஆற்றல்மிக்க ஞானிகளாகவே
தடையறக் கண்டுத் தேறுவர்
தவராஜன் தொண்டர்களென
11. என அடையாளம் கண்ட
எல்லோரும் இணைந்து நன்கு
ஞான ஆட்சி புவியில் தருவர்
நாட்டிய அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—